## ஆசிரியரின் குறிப்புகள்...


**ஸ்ரீ** ஸ்ரீநிவாஸ நிகேதனத்தின் பக்தர்களுக்கு அநேக நமஸ்காரங்கள்.

# 40 வது வருட பாத யாத்திரை



இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு மக்களின் வாழ்க்கைத்திறன் அதிகமாக ஆகிவிட்டது. வண்ண வண்ண ஆடைகள் வாங்கிக் கொண்டே இருக்கிறோம். அனைவருக்கும் கல்வி, உயர்தரக் கல்வி, மருத்துவம் முதற்கொண்டு அனைத்து விதத்திலும் உயர்ந்துவிட்டோம். நட்சத்திர ஹோட்டல்களில் விருந்து உண்கிறோம். நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்து படைக்கிறோம். ஆபரணங்களும் அதிகமாக வாங்குகிறோம். நமக்கு வேண்டிய எல்லா வசதிகளுடன் உள்ள வசதியான வீடுகளில் வசிக்கிறோம். கால்நடையாகவே நடந்துபோன காலம் போய் இரண்டு சக்கரம், மூன்று சக்கரம், நான்கு சக்கர வாகனங்களில் பயணம் செய்கிறோம் பண்டைய காலம்போல் இல்லாமல் இந்தியாவின் எல்லா பாகங்களுக்கும் சென்று பார்த்து மகிழ்கிறோம். நம்மிடம் பணப்பழக்கம் அதிகமாக ஆகி மகிழ்வுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறோம்.

இப்போதெல்லாம் கோவில்களில் கூட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. கோவில்களில் உத்ஸவங்கள் விமரிசையாக கொண்டாடப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் என்ன என்று யோசித்தால். நம்மிடம் இருக்க வேண்டிய ஏதோ ஒரு முக்யமான வஸ்து குறைவாக இருக்கிறது. அதுதான். மன அமைதி, சாந்தி என்றும் கூறலாம். இது ஒரு குறைதான். இந்த



குறையைத் தீர்க்கத்தான் அந்த குறை ஒன்றும் இல்லாத கோவிந்தனை நாடிப்போகிறோம்.

அந்த கோவில்களில் பல சாதனைகளைக் கையாண்டு நாம் பிரார்த்தனைகளைச் செலுத்துகிறோம். இறைவனின் நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்கிறோம். இறைவனைப் புகழ்ந்து பலவகை பாடல்களைப்பாடி பஜனை செய்கிறோம். நம் பிறந்த நாட்களில் கோவிலுக்குப்போய் ஆராதனை செய்து அன்னதானம் செய்கிறோம்.

ஆனாலும், தனித்தனியாக ஆராதனை செய்வதை பகவான் உடனே ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு பசு மாட்டின் உடல் பூராவும் பால் இருந்தாலும் காம்புகளின் மூலம் கறந்தால்தான் நமக்குப் பால் கிடைக்கிறது, அதுபோல் ஒரு குருநாதரை அணுகி அவர்மூலம் செய்யும் பிரார்த்தனைகளுக்கு பகவான் உடனே செவிசாய்த்து நமக்கு வேண்டிய பலன்களை நம் தகுதிக்கு ஏற்றவாறு, அதாவது நம் பாவபுண்யங்களுக்குத் தக்கவாறு அளிக்கிறார். இதை நாம் உணர்ந்துவிட்டோம்.

கோவிந்த உபாசகர் ஸ்ரீமத் ஸீதாராம ஸ்வாமிகள்தான் நம் குருநாதர். 50 வருடங்களாக ஆன்மீகத்தில் உள்ளார். 40 வருட காலங்களாக இறைவனை, ஸ்ரீ அம்ருதபுரிவாசனை, நெய் தீபத்தில் ஆவாஹனம் செய்து அவனை மனதார வணங்கி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே அவரின் மனதில் இருக்கும் கவலைகளை, குறைகளை

எடுத்துச் சொல்கிறார். ஸ்ரீ அம்ருதபுரிவாசனை ஜபம் செய்து வணங்கு. சத்சங்கத்தில் ஈடுபட்டு கோவிந்த நாமங்களைச் சொல்லக்கொண்டே இரு என்பது அருள்வாக்கு.

புரட்டாசி மாதம் 40 வருடங்களாக நடந்துவரும் பாதயாத்திரையில் கலந்துகொள். 5 நாட்கள் குருநாதருடன் அன்னை தாரா மாதாவுடன் ஸ்ரீ அம்ருதபுரி ஸ்ரீ இராமானுஜ யோகவனத்திற்கு நடந்து சென்று திருக்குடைகளை சமர்ப்பி. உன் குறைகளை அந்த பேசும் பெருமாள் தீர்த்து வைப்பான் என்பதுதான் அந்த குருநாதரின் தாரக மந்த்ரம்.

அக்டோபர் 1ந்தேதி புரட்டாசி மாதம் 15ந்தேதி செவ்வாய்க்கிழமை மாலை ஆன்மீகப் பெரியோர்களின் ஆசியுடன் பாதயாத்திரை கம்பீரமாக ஆரம்பித்தது.

குறையொன்றும் இல்லாத கோவிந்தா
கோவிந்தா ஹரே கோவிந்தா, கோவிந்தா ஹரே வைகுந்தா
வற்றாத செல்வ நிதி, பெற்றவனே - அருள்
வற்றாத திருமுகத்தைப் பெற்றவனே
அலர்மேல் அன்னைமேல் அன்பைக்கொண்டவனே
உந்தன் பதம் பணிந்தோம் யாம் செய்த பெருந்தவமே
கோவிந்தா ஹரே கோவிந்தா எங்கள் குறைகௌல்லாம்
தீர்த்து வைப்பாய் வைகுந்தா!

என்ற இனிமையான இறைவணக்கப் பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

வேலூர் ஹாஜியார் அவர்கள் நிகழ்த்திய உரையின் சாரம்.

நாகரீகம் தொடங்கிய நாளிலிருந்து இந்தியா ஒரு புண்ய பூமி. ஒரு கர்ம பூமி. என்றெல்லாம் அழைக்கிறோம். நம்முடைய முன்னோர்கள் சமயம். கலந்த சமதர்களாக. உலக, சமாதானத் திற்காகவும் அமைதிக்காகவும் அரும்பாருபட்டார்கள். ஸ்ரீ இராமானுஜர் அந்த்தக்காலத்திலேயே ஜாதிக்கு அப்பாற்பட்டவராக வாழ்ந்து காட்டினார் என்று வரலாறு பதிவாகி இருக்கிறது.

நம்முடைய ஸ்வாமிகள் நம்முடைய முன்னோர்களைப் போல சமயம் கலந்த சமதர்மத்திற்காகவும் உலக அமைதிக்காகவும் சர்வ, சமய, சமுதாய நல்லிணத்திற்காகவும் இருந்து வருகிறார்கள்.

பிரிட்டிஷ் காலத்திலேயே மற்ற மதங்களைத்தாக்கிப் பேச பணம் கொடுத்ததாக செய்தி இருக்கிறது. (Divide and Rule) என்னும் கொள்கையை அவர்கள். ஆன்மீகத்திலும் பயன்படுத்துகிறார்கள்.

நம்முடைய ஸ்வாமிகள் இந்தப்பாத யாத்திரையின்மூலம் உலகளாவிய சகிப்புத்தன்மை. பரந்த நோக்கு, மனித நேயம், இவைகளை அனைத்துத் தரத்து மக்களும் தெரிந்து கொள்ளமாறு நடந்து வருகிறார்கள். (A special Leader should be with a Broad vision and outlook நம் ஸ்வாமிகள் is an excellent example for this principle)

16ம் நூற்றாண்டில் வாழ்ந்த அக்பர் என்னும் மன்னனையும் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த, காஞ்சி மாமுனிவரையும் வரலாறு ஒப்பிடுகிறது.

அக்பர், உலகளாவிய சகிப்புத்தன்மை, மனிதநேயம், இவைகளைக் கொள்கைகளாகக் கொண்ட ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். சிறிது காலத்திற்குபின் அந்த மதம் இருக்கவில்லை.

ஆனால் காஞ்சி மாமுனிவரின் நடத்தைகளும் கொள்கைகளும் காலத்தால் அழியாதது. அத்தகைய பணிவும் பண்பும் நிறைந்தவர் நம் ஸீதாராம ஸ்வாமிகள் என்று சொல்லி அவரை வணங்குகிறேன் என்று ஸ்ரீஹாஜியார் அவரின் சிற்றுரையை முடித்தார்.

இந்திய வங்கியின் முன்னால் தலைவர் திரு. இராகவன் அவர்கள் பேசுகையில் அவர் வங்கியின் தலைமைப் பதவியை ஏற்கும் முன் நம் சுவாமிகளை வணங்கி ஆசீர்வாதம் பெற்ற பின்னரே பதவி ஏற்றேன். என்னுடைய ஸ்தாபனமும் நானும்

முன்னுக்கு வந்தேன் என்றார். என்னால் குருநாதரையும், பாதயாத்திரை பக்தர்களையும் வாழ்த்த வயதில்லை. வணங்குகிறேன் என்றார்.

**அடுத்து நம் குருநாதரின் அருளுரை-**

மஹாதேவமலை ஸ்வாமிகளுக்கும் ஹாஜியார் அவர்களுக்கும் வயதிலேயே மூத்தவர்களுக்கும் என்னுடைய நமஸ்காரம். இப்பணி எப்படி நடக்கிறது என்பதை சொல்ல முயற்சிக்கிறேன். சர்வ சக்தி கொண்ட பெருமாள் சங்கர நாராயண ரூபத்திலே நம்மிடத்திலே ஒன்று சேர்ந்து பாதயாத்திரையில் வருகிறார் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

இதில் ஜாதிக் கோட்பாடோ, வகுப்பு பேதமோ, வர்ணபேதமோ இல்லாத ஒரு நிலையிலே நடத்திக்கொண்டு இருக்கிறார் பரந்தாமன்.

பூமணக்கும் தெய்வப்புகழ் மணக்கும்
தேன் துவைக்கும் நா மணக்கும்
தித்திக்கு ஓர் நாயகனாம் ஸ்ரீ இராமானுஜப் பெருமானை
தூயமனத்தானை நம்பி, கை கூப்புவோம் நாம்.

தெய்வத்தின் திருஉருவான எனது அருமை ஆத்ம பந்துக்களே! தொண்டுசெய். அன்பு செய். தாராளமாக வழங்கு உன்னைப்புனிதப்படுத்திக்கொள். த்யானம் செய். உன்னையே அறிந்துகொள்ள முயற்சிசெய். Serve know purify and meditate and then realise. இதுதான் சாதாரண மனித வாழ்க்கையை தெய்வீக வாழ்க்கையாக மாற்றும் மார்க்கம். இப்படி வாழ வழி வகுத்துக்கொடுக்கும். சித்தர் ஸ்தாபனம்தான் ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ நிகேதனம். உடலைப்பேணு. மனதைப் பக்குவப்படுத்து. அறிவைத்தகுந்த வழியில் உபயோகப்படுத்து ஆன்மாவின் பணியை நீ அப்போது பூர்த்தி செய்யலாம். உடல், மனம், அறிவு, ஆன்மா என்னும் நான்கு தத்துவங்களையும் போதிக்கும் ஸ்தாபனம் ஸ்ரீ நிவாஸ நிகேதனம். ஒழுக்கம்

நிறைந்த வாழ்க்கையே தைவீக வாழ்க்கை தன்னை அறிந்துகொள்ளும் அறிவே உயர்ந்த ஞானம். தெய்வ நம்பிக்கையே வாழ்க்கைக்கு ஊன்று கோல் என்று எல்லாம் விளங்க என் வாழ்க்கையையே ஒரு உதாரணமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறேன்.

மனத்திற்கு அறிவிற்கும் ஏற்பட்டுள்ள நோய்கள் அல்லவா தீர்க்கப்படவேண்டும். இந்த ஒரு சிந்தனை தோன்றியது. சிந்தனையின் பொறி ஒளி ஒரு வேள்வித் தீயாக பரிணமித்தது. சர்வம் விஷ்ணு மயம். ஜகத் என்னும் உள்ளுணர்வு, சித்தாந்தம் மனதிற்கு எட்டியது.

ஸ்ரீஸ்ரீ நிவாஸ நிகேதனம் என்ற சர்வ சமய சமுதாய நல்லிணக்க சித்தர்களின் தெய்வீக வாழ்க்கைச் சங்கம். ஆரம்பமானது.

எப்பொழுதுமே மனம் தெய்வத்தை நினைத்துக் கொண்டிருந்தால் மட்டும் சேவைக்கு இடம் கொடாது. சோதனைகளும் வேதனைகளும் தொடர்ந்து வந்தால்தான் சேவை மனப்பான்மை தோன்றும். மிகவும் கஷ்ட காலம் வந்தால்தான் நாஸ்திகனும் கடவுளை நம்புகிறான்.

மனதை பக்குவப்படுத்தி, புலன்களை அடக்கி வாழும் பொழுது உன் உள்ளேயே நீ கடவுளைக் காணலாம். இறந்த காலம் இன்று கனவு. நிகழ்வுகாலம் நாளைக் கனவு. நாளையோ அதன் மறுநாளின் இறந்த காலம். இப்படி இருக்க, கனவுகளில் ஆசைப்பட்டு கடமையை மறந்துவிடதே. ஒழுக்கமில்லாத தெய்வ பக்தி. தெய்வ நிந்தனைக்குச் சமம். நல்ல நோக்கம். நல்ல மனம். நல்ல சிந்தனை. நல்ல அறிவு. நல்ல வாழ்க்கை. அதுவே அமைதிக்கும் சாந்திக்கும் அஸ்திவாரம். இப்படியெல்லாம் மக்களுக்குச்சொல்லி அவர்களை தெய்வீக வாழ்க்கைக்கு தயார் செய்யும் ஸ்தாபனம் தான் ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதனம்.

வெறும் வார்த்தைகளால் கருணை காட்டுவதோடு இரக்கம் காட்டுவதோடு நிற்காமல் அவற்றை பயனுள்ள

சேவையாக மாற்றும்போதுதான் நீ ஒரு உண்மையான தொண்டன் ஆகிறாய். அப்படி ஆவதற்கு அன்புள்ளம் வேண்டும். ஒழுக்கம் வேண்டும். நல்ல சிந்தனை வேண்டும். இயற்கையின் ஒருசிறு அணு தான் மனிதன். தனித்து செயல்பட முடியாது. சங்கத்தின் அங்கமாக செயல்பட்டால்தான் எண்ணம் நிறைவேறும். இப்படி ஒருவனை மாற வைப்பது தியான நிலை. அப்படி ஏற்படும் நிலைமையே தன்னை தூய்மைப்படுத்திக்கொள்ளும் முயற்சி.

உடல் இல்லையேல் இந்திரியங்கள் இல்லை. இந்திரியங்கள் இல்லையேல் உணர்வுகள் இல்லை. உணர்வுகள் இல்லையேல் மனம் இல்லை. மனம் இல்லையேல் அறிவு இல்லை. இவைகள் எல்லாம் இல்லாமல் ஆன்மாவை உணர்வது எப்படி? உனது கடமையை, பணியை உணர்ந்து ஆரோக்யமான உடலில்தான் ஆரோக்யமான எண்ணங்கள் உதயமாகும். காண முடியும்.

பல மதத்தினர். பல நிறத்தினர். பல மொழியினர் ஒருமைப்பட்டு உணர்ச்சியுடன் சாதனை புரியும் இடம் தான் ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதனம். ஸ்ரீ அம்ருதபுரி இராமானுஜ யோகவனமும் ஆகும். தெளிவான சிந்தை, ஒழுக்கம், தான் என்ற அகங்காரம் இல்லாத தன்மை. உண்மையான விசுவாசம். சத்திய நெறி. சமத்துவ நெறி. எளிமை. திடச்சித்தம். விட்டுக்கொடுத்தும் வாழும் தன்மை. மன உறுதி. நாணயம், தாழ்மை, நேர்மை, தாராள மனப்பான்மை, தர்ம சிந்தை போன்ற பண்புகளை வளர்த்துக்கொண்டால், தெய்வ சிந்தனை உடையவனாக நிச்சயமாக மாற முடியும். அமைதியைத் தேடித்திரியும் மனிதர்களுக்கு பேரின்பத்தைக் காட்டும் ஸ்தாபனமே ஸ்ரீ இராமானுஜ யோகவனம் ஸ்ரீ நிவாச நிகேதனம். வாக்கு வரவழைப்பானை, வாழும் வகை கொடுப்பானை, தூய மனத்துடன் நம்பி கை கூப்புவோம் என தற்காலிகமாக அருள்வாக்கினை முடித்தார் நம் குருநாதர்.

பிறகு பக்தர்களின் அமைதியான, பக்தியுடன் கூடிய பாத யாத்திரையை ஸ்ரீ அம்ருதபுரி ஸ்ரீநிவாசன். நடத்திச்செல்கிறார். அம்ருதபுரியை நோக்கி, முன்னே புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட, போக ஸ்ரீநிவாசர் அழகிய வண்ணத்தில் காட்சி கொடுக்கிறார். அதை அடுத்து, ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் சர்வாலங்கார பூஷிதனாய் பூமாலைகளால் மிக்க அழகுடன் மிளிர்கிறார். அதையும் கொஞ்சம் அனுபவிப்போம்.

திருப்பாதங்களின்மீது அலங்கரிக்கும் ஒரு முழம் கொண்ட இரண்டு மாலைகள் திருவடி மாலைகள் எனப்படும். கிரீடத்தின் மீது இருந்து, இரண்டு திருத்தோள் வரை அலங்கரிக்கும் எட்டு முழம் மலர் மாலைகள் சிகாமணி என்றும், திருத்தோளில் இருந்து இரண்டு பாதங்கள் வரையிலும் ஆடும்படிக்கு அலங்கரிக்கப்படும் மாலைகளை சாலிக்கிராம மாலை என்றும், திருக்கழுத்திற்கு இரண்டு பொறையாக திருத்தோள் மீது அலங்கரிக்கப்படும் மூன்றரை முழ மலர்மாலையை கண்டசரி என்னும் பெயர் சொல்வர். இங்கனே ஒவ்வொரு மாலையும் சமர்ப்பித்திருக்கும் புதுப்பொலிவுடன் தரிசனம் அளிக்கின்ற நித்ய கல்யாண மூர்த்தியை பக்தர்கள் ஸ்ரீ ஸ்ரீநிவாச மூர்த்தி பத்மாவதி தாயாரை மணம் செய்து கொள்ளும் எண்ணத்துடன் ஆகாசராஜனின் நந்தவனத்திற்கு செல்கிறான். ஆகாச ராஜனின் செல்வ மகளான பத்மாவதி தாயார் தன் தோழிகளுடன் உத்யானவனத்தில் ஆனந்தமாக இருக்கும்பொழுது பகவான் தன் பெயர் கிருஷ்ணன், தன் தாயார் பெயர் தேவகி, தகப்பனார் பெயர் வாசுதேவன். நான் திருமலையிலிருந்து வருகிறேன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

அப்படிபட்ட பெருமாளை நொடிப்பொழுது தரிசனத்தாலே பரம ஆனந்தத்தைக் கொடுக்கும் பொழுது, ஐந்து தினங்கள் கண்கொட்டாமல் தொடர்ந்து தரிசனம் செய்தவர்களின் பாக்கியம் எப்படிப் பட்டது. என்பதை அவர்கள்தான் சொல்லவேண்டும்.

**- ஜய் ஸீதாராம்**